KCC News Letter

# அசைவு

ASAIVU අසෙවු

2009 ஆகஸ்ட் ஹிஜ்ரி 1430 ஷஃபான் பக்கங்கள் 08 இதழ் 07

## கிண்ணியா மத்திய கல்லூரி அகில இலங்கை சம்பியன்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும், இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து அகில இலங்கை ரீதியில் 15 வயது பாடசாலை உதைபந்தாட்ட அணிகளுக்கிடையே நடாத்திய போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இச்சுற்றுப் போட்டி ஆரம்பத்தில் மாவட்ட, மாகாண மட்டங்களில் நடாத்தப்பட்டது. இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட 22 பாடசாலை அணிகளுக்கிடையிலான, இறுதிக் கட்டப்போட்டி கடந்த 11ம் திகதி முதல் 13ம் திகதி வரை அநுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இறுதிக் கட்டப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி கட்டுகஸ்தோட்ட ஸாஹிரா கல்லூரியை 3-0 என்ற கோல்களினாலும், சிலாபம் ஆனந்தா கல்லூரியை சமநிலையிலும் (1-1), மன்னார் சென்.லூசியஸ் கல்லூரியை 3-1 என்ற கோல்களினாலும் பதுளை ஜினதாச கல்லூரியை 1-0 என்ற கோலினாலும் வெற்றி பெற்று அரை இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.



அரை இறுதி ஆட்டத்தில் காலி மஹிந்தா கல்லூரி அணியுடன் விறுவிறுப்பான ஆட்டத்தில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி 2-1 என்ற கோல்களினால் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத்தெரிவானது இறுதி ஆட்டத்தில் கொழும்பு றோயல் கல்லூரி அணியை 3-0 என்ற கோல்களினால் இலகுவாக வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. இவ்வணியின் சார்பில் இஹ்றாம், றியாஸ், நிஹ்றாஸ் ஆகிய வீரர்கள் கோல்களைப் போட்டனர்.

## தொடர் கதையாகும் ஆசிரியர் பற்றாக்குறை

பன்னெடுங் காலமாக இடம் பெற்றுக் கொண்டு வரும் ஆசிரியர் பற்றாக்குறை இன்று வரை முழுமையாக தீர்த்து வைக்கப்படாமல் தொடர்கதையாகத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. மொத்தமாக 95 பேர் தேவைப்படும். ஆசிரியர் வளத்தில் 78 பேர் மட்டுமே இங்கு நிரந்தரமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

பட்டதாரி ஆசிரியர் நியமனத்தைப் பொறுத்த வரையில் 9 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் மூவர் மாத்திரமே கடமையேற்றுள்ளனர். ஏனையோர் கடமையேற்கவில்லை.

ஓரிருவர் தற்காலிக இணைப்பில் இருக்கின்றனர். அவர்களும் தமது இணைப்பை ரத்துச் செய்து விட்டு முன்னைய பாடசாலைக்கு சென்று விடுவதால் இன்னும் நெருக்கடி நிலை அதிகரிக்கின்றது.

இந்தநிலையில் ஆரம்பப்பிரிவு ஆங்கிலம், சிங்களம், இடைநிலைப்பிரிவில் கணிதம் போன்ற பாடங்களுக்கு தொடர்ந்து ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகின்றது.

உயர்தரத்திற்கான , இரசாயனவியல், IT, இணைந்த கணிதம், ஆங்கிலம், இஸ்லாம், புவியியல் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை தொடர்கதையாகவே உள்ளது.

## வகுப்பறை பற்றாக்குறையும் மாணவர்களின் அவலமும்

2000க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ள எமது கல்லூரியில் வகுப்பறைகளுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக மாணவர்களும்,ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது.சில சந்தர்ப்பங்களில் ஒரு வகுப்புக்குள் இரண்டு வகுப்புக்கள் கூட வைக்கப்பட்டுள்ளன. வழமையான மர நிழல் வகுப்புக்கள் இன்னும் நீங்கிவிடவில்லை.

660 மாணவர்களைக் கொண்ட ஆரம்பப்பிரிவுக்கு 20 வகுப்பறைகள் தேவைப்படும் அதே நேரத்தில் 15 வகுப்பறைகள் மட்டுமே இருக்கின்றன.311 மாணவர்களைக் கொண்டுள்ள உயர்தர கலை, வர்த்தக, கணித,விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கு மொத்தமாக 10 வகுப்பறைகள் தேவைப்படும் போது தற்போது 5 வகுப்பறைகள் மாத்திரமே கைவசம் இருக்கின்றன.விசேட வகுப்புக் களுக்கென 8 வகுப்பறைகள் தேவைப்படும் போது அவற்றில் ஒன்று கூட இல்லாத அவல நிலையே காணப்படுகின்றது.

நீண்டகாலமாக உப கல்வி வலயமாக இயங்கி வந்த பாடசாலையின் இரு வகுப்பறைக் கட்டிடங்கள் புதிய கல்வி வலயம் அமைக்கப்பட்டு அலுவலகம் இடமாறியமையால் மீண்டும் பாடசாலைக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் (Welding Workshop) செயற்பாட்டறையான ஒரு வகுப்பறையும் துப்பரவு செய்யப்பட்டு வகுப்பறையாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே எமது வகுப்பறைத் தட்டுப்பாடு 3 வகுப்பறைகளால் குறைக்கப்பட்டுள்ளது. மொத்த வகுப்பறைத் தேவை 69 உள்ள அதே வேளை 53 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன.

எனவே உரிய தலைவர்கள் அதிகாரிகள் கிண்ணியா மத்திய கல்லூரியின் இவ்வகுப்பறைத் தட்டுப்பாடுகளை உடனடியாகக் களைந்து மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு வழிகாட்ட மாட்டார்களா என்ற ஏக்கத்தோடு அசைவினூடாக வெளியுலகத்திற்கு அசையவிடுகின்றோம்.

# Kinniya Central College

## அசைவு

KCC News Letter 2009 July

Audio : 026 2236274
Email : kinniyacc@gmail.com
Web : www.kinniyacentral.org

## நாற்காலியாக நின்று ...

"ஒரு பாடசாலையை திறத்தல் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடுவதாகும்." இது கல்விக் கூடங்களில் உயரிய இலட்சியத்தை தாங்கி நிற்கும் உலகம் முழுவதற்குமான மகுடவாசகமாகும். உண்மையில் பாடசாலைகள் மூலம் எட்டப்பட வேண்டிய அந்த இலக்கை அடைவதற்கு பாடசாலை ஒன்றை திறந்து விட்டு அந்த அடைவு எம்மை வந்தடையும் என்று ஏங்கிக் கொண்டிருப்பது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல அங்கே அர்ப்பணிப்புக்கள் பல்வேறு மட்டங்களிலும் புரியப்படவேண்டும். ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்டதல்ல பாடசாலை. மாறாக சமுகத்தின் ஒவ்வோர் படித்தரத்திலுமுள்ளவர்களின் அயராத அர்ப்பணிப்புக்களினாலேயே ஆழ விழுதுகளாக அது பலம் பெறுகின்றது.

ஒரு மாணவனின் ஆரம்பப் பாடசாலை அவனது இல்லமாகும். பெற்றார் அவனின் ஆசான்களாவர். அங்கே அவனுக்கு நற்பழக்க வழக்கங்கள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இதனை எத்தனை பெற்றார்கள் செய்கிறார்கள்? இவற்றை நிவர்த்தி செய்யாதவர்களாக 5 வயதில் பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பி விட்டு தனது கடமை முடிந்து விட்டது என்று ஏக்கப் பெரு மூச்சு விடுகிறார்கள். பச்சிளம் பருவத்தில் பிள்ளைகள் பாடசாலைச் சூழலை விடவும் வீட்டுச் சூழலிலே கூடுதலாக உலா வருகிறார்கள். அங்கே பிரயோகிக்கப்படும் நல்ல வார்த்தைகளும், கெட்ட வார்த்தைகளும், நல்ல செயல்களும், கெட்ட செயல்களும், பசுமரத்தாணியாக பதிந்து விடும் போது அத்தகையதோர் நிலையிலேயே பிள்ளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கின்றது. எனவே சிறைச்சாலை திறப்பதோ அல்லது மூடுவதோ பெற்றார்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

பாடசாலையைத் தங்கி நிற்கின்ற இரு பெரும் தூண்களான அதிபரும், ஆசிரியர்களும் பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர்களின் உயர்ச்சியிலும் தங்களை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். பாடசாலை அதிபரிடம் உள்ள முற்போக்கு எண்ணங்களுக்கு உயிர் கொடுப்பவர்களாக ஆசான்கள் திகழ வேண்டும். அப்போதுதான் ஆயிரம் சிறைச்சாலைகளை மூட முடியும். எமது பாடசாலை கிராமப் புறத் தேசியப் பாடசாலையாக நோக்கப்படுவது போன்றே எங்களது பாடசாலைகளையும் கல்வித் திணைக் களங்கள் நோக்கிக் கொண்டிருக்கின்றன. அதன் காரணமாகவே நிரப்பப்படாத ஆசிரிய வெற்றிடங்கள் தொடர்ந்தும் நிலவிக் கொண்டிருக்கின்றது. வகுப்பறைத் தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவிக் கொண்டிருக்கின்றது. கல்விசாரா ஊழியர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் காரணமாக அண்மைக் காலங்களில் எங்களது பாடசாலையில் சில கசப்பான அனுபவங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார்? எமது பாடாசலைத் தேவையை உரிய அதிகாரிகள் நிவர்த்தி செய்யும் போதுதான்......

எல்லாவற்றுக்கும் மேலாக பிரதேசத்தின் பிரதிநிதிகளாக, பிரதேச அபிவிருத்தியின் முன்னோடிகளாக இலங்குகின்ற அரசியல் தலைமைகள் எங்களது பாடசாலையை கடமைகள் கொண்டு பார்க்க வேண்டும். பிரதேசத்தின் ஒரே ஒரு தேசிய பாடசாலை என்றுள்ள இதற்கு உண்மையாக அர்த்தத்தை ஏற்படுத்த துணை நிற்க வேண்டும். போதியளவு வசதிகள் இல்லாத நிலையிலும் எங்கள் பாடசாலை சகல துறைகளிலும் தலை நிமிர்ந்து நிற்கும் போது அது மென்மேலும் உயர்ந்து நிற்பதற்கு அனைத்துத் தரப்பினரும் தத்தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படும் போதுதான் ஆரம்பத்தில் கூறிய கூற்று நிஜமாக முடியும்.

## பாடசாலைக்கான உதவிகள்

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமலிருந்து வந்த கல்லூரியின் விளையாட்டு மைதானம் 10 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இந்நிதியினை கிழக்கு மாகாணசபைத் தவிசாளர் கௌரவ எச்.எம்.எம்.பாயிஸ் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார். ஆரம்பப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட போது கல்லூரியினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று இந்நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். அசைவினூடாக அவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வருடம் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு இலட்சம் ரூபாவை கூட்டுறவுத்துறை அமைச்சரும் பாரளாளுமன்ற உறுப்பினருமான கௌரவ நஜீப் அப்துல் மஜீது அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார். அசைவினூடாக அவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிறைவு செய்யப்படவிருக்கும் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தினை பூரணப்படுத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாவை தனது மாகாண ஒதுக்கீட்டிலிருந்து வழங்குவதாக கௌரவ எம்.எஸ் .தௌபீக் அவர்கள் வாக்குறுதியளித்துள்ளார், அவருக்கும் எமது அசைவினூடாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பஹிமாவுக்குப் பாராட்டு



2008ம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தேசிய ரீதியாக கலைப் பிரிவில் முதலிடம் பெற்று கிண்ணியாவுக்கு பெருமை சேர்த்த கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மாணவி ஜெய்னுலாப்தீன் பஹிமாவை கிண்ணியா மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் பாராட்டி கௌரவித்து பரிசும் வழங்கினர். இந்நிகழ்வு கல்லூரியின் அப்துல் மஜீது மண்டபத்தில் இவ்வருட ஆரம்பத்தில் நிகழ்ந்தது. பஹிமாவை முதன் முதலில் பாராட்டி கௌரவித்தது கிண்ணியா மத்திய கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய ஆசிரியர்கள் நியமனம்

அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனம், கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்களிலிருந்து கீழ்வரும் ஆசிரியர்கள் நியமனம் பெற்று வந்துள்ளனர். இவர்களை அசைவின் மூலம் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**Graduates**

| | |
|---|---|
| Mrs.F.Famila | B.A. - English |
| Mr.M.M.A.Abrar | BSc, Agri |
| Miss.M.A.Rikasa | MSc, Agri |

**College of Education**

| | |
|---|---|
| Mr.U.Ramsan | Primary |
| Miss A.L.Sithy Sareena | Primary |
| Miss.M.S.Sanoja | Tamil |
| Mr.A.M.Farsath | Science |

**ஆசிரியர் : ஏ.ஏ.சஹீருள்ள**
**பக்க வடிவமைப்பு : இம்தியாஸ் ஜவ்பர்**

# கிண்ணியா வலயத்தின் முதலாவது விளையாட்டுப் போட்டியில் மத்திய கல்லூரிக்கு சமர்ப்பணமான வெற்றிகள் !

இதுவரை காலமும் மூதூர் கல்வி வலயத்துடன் இணைந்து செயற்பட்ட கிண்ணியா, தனியான வலயமாக பிரிக்கப்பட்ட பின்னர் மலர்ந்து மணம் பரப்பிய கன்னி விளையாட்டுப் போட்டியில் கிண்ணியா வலய பாடசாலைகளுக்கிடையிலான முதலாவது விளையாட்டுப் போட்டியில் பங்கு கொண்ட கிண்ணியா மத்திய கல்லூரி 33 முதலிடங்களையும், 27 இரண்டாமிடங்களையும், 14 மூன்றாமிடங்களையும் பெற்று வலயத்தில் முதலிடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## குழு நிலை விளையாட்டுப் போட்டிகளில் வலயமட்டத்தில் முன்னணி

இப்போட்டிக்குழுவினர் மாவட்ட மட்டத்திற்குத் தெரிவாகி அவர்களில் 17,19 வயது உதைப்பந்தாட்ட குழுவினர் மாவட்ட மட்டத்தில் இறுதிப்போட்டிற்கு தயார் நிலையில் இருந்துகொண்டிருக்கின்றனர் மேற்படி போட்டியில் மாவட்டத்தின் ஏனைய முன்னணிப் பாடசாலைகள் பலவற்றைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருக்கும் 3 பாடசாலைகளும் கிண்ணியா பிரதேச பாடசாலைகள் என்பது விஷேட அம்சமாகும். மாவட்ட மட்ட செஸ் போட்டியில் 15 வயதின் கீழ்ப் பிரிவில் கிண்ணியா மத்திய கல்லூரி மாணவர்கள் ரன்னர் அப் ஆக தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டப் போட்டிக்கு தயார் நிலையில் இருந்து கொண்டிருக்கின்றனர்.

செஸ் விளையாட்டு இப்பிரதேசத்தில் அவ்வளவு பிரபல்யம் பெற்றாக இல்லை. இருந்தபோதிலும் எமது மாணவர்கள் மிகவும் துணிச்சலுடன் இவ்விளையாட்டில் ஈடுபட்டு வெற்றியீட்டியிருப்பது எமது மண்ணுக்கு கிடைத்த பெருமையாகும்.

| | | |
|---|---|---|
| கரப்பந்தாட்டம் | 15ன் கீழ் | சம்பியன் |
| | 17ன் கீழ் | ரன்னர் அப் |
| உதைப்பந்தாட்டம் | 17ன் கீழ் | சம்பியன் |
| | 19ன் கீழ் | ரன்னர் அப் |
| கிரிக்கட் | 19ன் கீழ் | சம்பியன் |
| செஸ் | 15ன் கீழ் | சம்பியன் |
| | 19ன் கீழ் | சம்பியன் |
| டேபிள் டெனிஸ் | 15ன் கீழ் | சம்பியன் |
| | 19ன் கீழ் | சம்பியன் |

## மாகாண விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி

கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்று முடிந்த மெய்வல்லுனர் நிகழ்ச்சியிலும் வெற்றி சவீகரிக்கப்பட்டுள்ளது.

13 வயதுப் பிரிவில் எஸ். இம்தாத் 100 மீற்றர் ஓட்டத்தில் 2 ஆம் இடம், நீளம் பாய்தலில் 3 ஆம் இடம்.

15 வயதுப் பிரிவில் யு.சிகாம் குண்டு போடுதல் நிகழ்ச்சியில் முதலாமிடம், 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் 3 ஆம் இடம். எம்.முஸ்னி 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் முதாலாமிடம் கிடைத்தது.

17 வயதுப் பிரிவில் எஸ்.எம்.சர்ஜிஸ் 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் 2 ஆம் இடம் நீளம் பாய்தலில் 2 ஆம் இடம். எம்.கே.எம்.அர்சாத் குண்டு போடுதலில் முதலாமிடம் கிடைத்தன.

21 வயதுக்குட்பட்ட நிகழ்ச்சியில் கே.எம்.கியாஸூம் குண்டு போடுதலில் முதலமிடம் கிடைக்கப்பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.



(மாகாண போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள்)

## மாவட்ட மாகாண வெற்றிகள்

2008,2009 பருவ கால விளையாட்டுப் போட்டிகளில் பிரதேச, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களிலான போட்டிகளில் கிண்ணியா மத்திய கல்லூரி கனிசமான அளவு வெற்றிகளைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

17வயது மட்டத்திலான அகில இலங்கை உதைப்பந்தாட்டப் போட்டியில் கொழும்பு சாகிரா கல்லூரியுடன் இறுதிப்போட்டியில் நுழைந்து மத்திய கல்லூரி 2ம் இடத்துக்கு தெரிவானது

தேசிய மட்டத்திலான கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் S.M.சர்ஜீஸ் என்ற மாணவன் நீளம் பாய்தல் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.



(மாவட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள்)

இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சம்மேளனம் நடாத்திய 13,15,17 பிரிவு மாணவர்களுக்கான உதைப்பந்தாட்ட போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி குழுவினரே சகல மட்டங்களிலும் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டனர் பிராந்திய, மாவட்ட, மாகாண, மட்டங்களில் இம்மாணவர்கள் தொடர் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டமை விஷேட அம்சமாகும்.

கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட 2009 இற்கான உதைப்பந்தாட்ட போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரியின் 19வயது குழுவினர் 4ம்இடத்தைப் பெற்றுக்கொண்டனர். கொரியா அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இவ்வுதைபந்தாட்ட போட்டியில் 48 பாடசாலைகள் பங்கு பற்றிய நிலையில் 4ம் இடத்தைப்பெற்ற எமது கல்லூரிக்கு 10,000 ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது.

## மாகாண அஞ்சலோட்டச் சம்பியன்

கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்று முடிந்த மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் அஞ்சலோட்டத்தில் கிண்ணியா மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி 4X 100 மீற்றர் ஓட்டத்தில் 13 வயது, 15 வயது 17 வயது ஆகிய நிகழ்ச்சியில் முதலாமிடம் கிடைக்கப் பெற்றது. 21 வயதுப் பிரிவில் 3 ஆம் இடம் கிடைத்தது.

4X 400 மீற்றர் அஞ்சல் நிகழ்ச்சியில் 15 வயதுப் பரிவில் 2 ஆம் இடம், 21 வயதுப் பிரிவில் 3 ஆம் இடத்தையும் பெற்று திருகோணமலை மட்டத்திற்கு முதலிடத்தைப் பெற்றுக் கொடுத்து சம்பியன் கிண்ணத்தை கிண்ணியா மத்திய கல்லூரி பெற்றுக் கொண்டது.

# இல்ல விளையாட்டுப் போட்டிகள் - 2009

இவ்வருடம் இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பப் பிரிவிற்கு (தரம் 1-5) தனியாகவும், ஏனைய பிரிவுகளுக்கு (தரம் 6-13) தனியாகவும் சிறப்பாக நடந்து முடிந்தன.

ஆரம்பப் பிரிவு போட்டி முடிவுகள்

முதலாமிடம் - மினா இல்லம்
இரண்டாமிடம் - சபா இல்லம்
மூன்றாமிடம் - மர்வா இல்லம்.
நான்காமிடம் - அரபா இல்லம்.

ஏனைய பிரிவு விளையாட்டுப் போட்டிகளில் மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் உட்பட சகல வயதுப் பிரிவுகளுக்கும் பெரு விளையாட்டுக்களும், உள்ளக விளையாட்டுக்களும், வீதி ஓட்டமும் நடாத்தப்பட்டன.

### Cricket

| வயதுப் பிரிவு | முதலாமிடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| 13 | மர்வா | அரபா | சபா |
| 15 | அரபா | சபா | மர்வா |
| 17 | அரபா | மினா | மர்வா |
| 19 | மர்வா | சபா | அரபா |
| 21 | சபா | அரபா | மினா |

### Volleyball

| வயதுப் பிரிவு | முதலாமிடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| 15 | மினா | சபா | அரபா |
| 17 | அரபா | சபா | மினா |
| 19 | மினா | சபா | அரபா |
| 21 | அரபா | சபா | மினா |

### Football

| வயதுப் பிரிவு | முதலாமிடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| 13 | அரபா | சபா | மர்வா |
| 15 | மர்வா | அரபா | சபா |
| 17 | மர்வா | அரபா | சபா |
| 19 | மர்வா | அரபா | மினா |
| 21 | சபா | மர்வா | அரபா |

### Table Tennis

| வயதுப் பிரிவு | முதலாமிடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| 15 | அரபா | சபா | மினா |
| 17 | மர்வா | அரபா | சபா |
| 19 | அரபா | மினா | மர்வா |

### Chess

| வயதுப் பிரிவு | முதலாமிடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| 15 | சபா | அரபா | மர்வா |
| 17 | மர்வா | சபா | மினா |

### Games Winners

| | | |
|---|---|---|
| Champion | Arafa | 195 Points |
| 2nd Place | Safa | 155 Points |
| 3rd Place | Marwa | 140 Points |
| 4th Place | Mina | 80 Points |

### Marchpast Result

| | |
|---|---|
| 1st Place | Marwa House |
| 2nd Place | Mina House |
| 3rd Place | Safa House |
| 4th Place | Arafa House |

### Indivitual Champions

| | | | |
|---|---|---|---|
| Under 11 | N.Asfaque | 9 Points | Mina |
| Under 13 | S.M.Imthath | 15 Points | Arafa |
| Under 15 | U.Iham | 15 Points | Marwa |
| Under 17 | S.M.Sarjees | 15 Points | Mina |
| Under 19 | N.M.Safan | 15 Points | Mina |
| Under 21 | K.M.Siyan | 13 Points | Safa |

### House Decoration Winners

| | |
|---|---|
| 1st | Safa House |
| 2nd | Marwa House |
| 3rd | Mina House |
| 4th | Arafa House |

### Overall Winners

| | | |
|---|---|---|
| 1st | Arafa House | 184 Points |
| 2nd | Mina House | 137 House |
| 3rd | Marwa House | 133 Points |
| 4th | Safa House | 123 Points |

### Road Race Winners

| Age Group | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|
| Under 13 | M.N.Rinas (Mina) | A.S.Nuksi (Arafa) | M.A.Haseem (Marwa) |
| Under 15 | S.M.Safren (Arafa) | M.A.Imran (Mina) | M.M.Fawas (Mina) |
| Under 17 | M.A.M.Rifas (Arafa) | M.A.Munas (Marwa) | I.Fairoos (Safa) |
| Under 19 | A.M.Rifas (Arafa) | N.M.Sifan (Mina) | S.M.Irsath (Marwa) |
| Under 21 | A.K.Riham (Safa) | A.A.Imthiyas (Marwa) | N.J.M. Azik (Arafa) |


(எஸ்.எம்.சர்ஜிஸ்)

## மலேசிய பயணம்.

எமது கல்லூரி மாணவன் எஸ்.எம்.சர்ஜிஸ் 15 வயதுக்குட்பட்ட இலங்கையின் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரேயொரு வீரர் இவராவார்.

இம்மாதம் 7ம் திகதி முதல் ஒரு மாதகாலப் பயிற்சியைப் பெற்று வரும் இவர் அடுத்த மாதம் மலேசியாவில் நடைபெறவுள்ள இலங்கை அணி சார்பாக விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிண்ணியாவின் வரலாற்றில் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கணித வினா விடை போட்டி
## வலய மட்ட முடிவுகள் - 2009

| | | |
|---|---|---|
| N.M.அஸாம் | தரம் 06 | 4ம் இடம் |
| M.R. பாதி | தரம் 07 | 3ம் இடம் |
| A.M.இஹ்திஸாம் | தரம் 08 | 1ம் இடம் |
| J.M.நாஜிஹீன் | தரம் 08 | 2ம் இடம் |
| M.N.சையாப் | தரம் 09 | 1ம் இடம் |
| A.M.றிபாஸ் | தரம் 10 | 1ம் இடம் |
| S.M.முஸ்னி | தரம் 11 | 2ம் இடம் |
| I.M.அர்சாத் | தரம் 11 | 3ம் இடம் |

## விஞ்ஞான வினா விடை போட்டி
## வலய மட்ட முடிவுகள் - 2009

| | | |
|---|---|---|
| M.C.M.அதீப் | தரம் 06(E) | 1ம் இடம் |
| M.றொசான் அக்தார் | தரம் 07(E) | 1ம் இடம் |
| M.N.பஹிமுல் பசரி | தரம் 07 | 1ம் இடம் |
| M.N.பஹ்மான் நவாஸ் | தரம் 07 | 2ம் இடம் |
| M.M.றிஸ்வி | தரம் 09 | 1ம் இடம் |
| N.நிப்லாஸ் | தரம் 10 | 1ம் இடம் |
| M.L.நிஸாமி | தரம் 10 | 2ம் இடம் |
| I.M.அர்ஸாத் | தரம் 11 | 1ம் இடம் |

## ஈராண்டுகளின் இலக்கியத்துறைசார் வெற்றிகள்

கடந்த 2008லும், நிகழும் 2009ன் ஆரம்பத்திலும் மாணவர்கள் பல்வேறு இலக்கியத் துறை சார்ந்த வெற்றிகளை ஈட்டி கல்லூரிக்கு கீர்த்தியைப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.குறிப்பாக பிரதேச மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரைக்கும் இவர்களின் வெற்றிகள் வியாபித்துக் காணப்படுகின்றன.

## பெப்ரல் மனித உரிமை வினா விடைப் போட்டி

வருடாவருடம் நடாத்தப்பட்டு வரும் சுதந்திரமான தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்பான பெப்ரலின் மனித உரிமைகள் தொடர்பான வினா விடைப் போட்டியில் கல்லூரி மாணவர்களான A.O.அஹமட் சிப்றாஸ், R.M. நப்றாஸ், A.M. றியாத், M.A. பைறூஸ் ஆகியோர் எழுத்துப் பரீட்சையில் 2ம் இடத்தையும் வாய் மூல வினா விடைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்று வெண்கலப் பதக்கம் பெற்றனர்.

அற்லஸ் சித்ரு கட்டுரைப் போட்டியில் மாகாணமட்டத்தில் தரம் 13 மாணவன் N.M. நுஸ்மில் 1ம் இடம் பெற்றார்.

❖Vijeya News Papers Limited & Columbus Zoo என்பவற்றின் அனுசரணையுடன் Turtle Consevuation Project (T.C.P) நடாத்திய அகில இலங்கைமட்ட சித்திரப் போட்டியில் 12ம் தர கணிதப் பிரிவு மாணவன் M.N. பஹீமுல் பயாஸ் சிறப்புப் பரிசைப் பெற்றார்.

❖ மனித உரிமைப் பிரகடனத்தை 60ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பீடம் நடாத்திய அகில இலங்கை மட்ட கட்டுரைப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் 7ம் தர மாணவன் சஹீறுள்ளா மிப்ராத் அஹமட் தங்கப்பதக்கத்தையும் 10.000 ரூபா பெறுமதியான புத்தகப் பொதிகளையும் பரிசாகப் பெற்றார். இவருக்கான பரிசில்களும் சான்றிதழும் பண்டார நாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் வைத்து பேராசிரியர் இந்திரால் டி சில்வா அவர்களால் வழங்கப்பட்டது.

## அகில இலங்கை மட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம்



2008ம் ஆண்டிற்கான தமிழ்தினப் போட்டிகள் அண்மையில் நடந்து முடிந்தன. இதன்படி 5ம் பிரிவு சிறுகதை ஆக்கப் போட்டியில் தேசிய ரீதியான முதலிடத்தை எமது கல்லூரி மாணவன் எம்.ஸியாத் வென்றுள்ளார்.

வலய மட்டப் போட்டிகள் தொடக்கம் தேசிய மட்டப் போட்டிகள் வரை தொடர்ந்தும் இவர் முதலிடத்தைப் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

## சமூக விஞ்ஞானப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரிக்கே அதிக வெற்றிகள்

2008, 2009ம் ஆண்களில் நடைபெற்ற கோட்ட மட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளில் எமது கல்லூரியே என்றுமில்லாத மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. இப்போட்டியில் பங்குபற்றிய எமது கல்லூரி மாணவர்களே 1ம், 2ம் இடங்களைப் பெற்றமை விஷேட அம்சமாகும். 2009ம் ஆண்டு வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்கள்

| | | |
|---|---|---|
| A.ஆஸீம் சப்ராஸ் | தரம் - 6 | 1ம் இடம் |
| M.N.பஹிமுல் பசரி | தரம் - 7 | 1ம் இடம் |
| A.M.இஹ்திஸாம் | தரம் - 8 | 1ம் இடம் |
| M.J.M.சாதிர் அர்ஷாத் | தரம் - 8 | 3ம் இடம் |
| M. முகமமது றிஸ்வி | தரம் - 9 | 2ம் இடம் |
| M.T. முகம்மட் பாசில் | தரம் - 10 | 2ம் இடம் |
| I.M.அர்ஷாத் | தரம் - 11 | 2ம் இடம் |
| A.S.M.முபீஸ் | தரம் - 11 | 3ம் இடம் |

## தேசிய மீலாத் விழா மாவட்ட மட்டத்தில் வெற்றி

இவ்வருடம் தேசிய மீலாத் விழாவுக்கு முன்னோடியாக மாவட்ட மட்டங்களில் மீலாத் விழா கலாசார நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் எமது கல்லூரி மாணவர்ளுக்கு மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட கலாசாரப் போட்டியில் கனிஸ்ட பிரிவில் இஸ்லாமிய கீதம் நிகழ்ச்சியில் என்.எம்.றபீஸ் 1 ஆம் இடம், எம்.எம்.இன்பாஸ் 2 ஆம் இடம் சீரேஸ்ட பிரிவில் எஸ்.எம்.எம்.தமீம் 1 ஆம் இடம், எம்.ரீ.கலீலுள்ளா முதலாம் இடம் எம். ஆரிப் (கிரஆத்) 2 ஆம் இடம் கிடைக்கப்பெற்றது.

மாகாண மட்டத்தில் நடைபெற்ற மீலாத் போட்டியில் எம்.ரீ. கலீலுள்ளா முதலாமிடத்தையும், எஸ்.எம்.எம்.தமீம் இரண்டாமிடத்தையும். எம்.எம்.இன்பாஸ் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

## மூன்று முதலிடம்

ஒவ்வோர் ஆண்டும் ஒக்டோபர் மாதத்தில் இடம்பெறும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கிண்ணியா நகரசபை 2008ல் மூன்று நிகழ்ச்சிகளை அரங்கேற்றியது. இம் மூன்றிலும் கிண்ணியா மத்திய கல்லூரிக்கே முதலிடம் கிடைக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| M.J. கலீலுள்ளா | தரம் - 10 பேச்சு | 1ம் இடம் |
| C.M. சபீர் | தரம் - 12 சித்திரம் | 1ம் இடம் |
| குழு | தரம் - 13 வீதி நாடகம் | 1ம் இடம் |

# வலய மட்ட விவசாயப் போட்டிகளில் வெற்றி



(நாம் பயிரிடுவோம், நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற சிந்தனைக்கேற்ப செய்கை பண்ணப்பட்டு வலயத்தில் முதலிடம் பெற்ற தோட்டத்தையும் மாகாண மட்டப் போட்டிக்காக தோட்டம் மதிப்பீடு செய்யப்படுவதையும் படங்களில் காணலாம்.)

இவ்வருடம் நடாத்தப்பட்ட விவசாய அறிவுப் போட்டியில் இடைநிலை வகுப்பில் முதலாமிடம் கிண்ணியா மத்திய கல்லூரிக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இப்போட்டியில் ஐ.எம்.அர்சாத், ஏ.எம்.பசுலு, எம்.ரீ.கலீலுள்ளா ஆகியோரே கல்லூரிக்கு பெருமையீட்டிக் கொடுத்தனர். சிரேஸ்ட பிரிவு விவசாய அறிவுப் போட்டியில் 2 ஆம் இடம் கிடைக்கப் பெற்றுள்ளது. பாறுக் பசீர், அப்துல் முபாறக் இர்சாத், ஜுனைதீன் முஜீப் ஆகியோரே கல்லூரிக்கு பெருமையீட்டிக் கொடுத்துள்ளனர்.

அத்துடன் கிண்ணியா வலய மட்டத்தினால் நடாத்தப்பட்ட விவசாய பேச்சுப் போட்டியில் க.பொ.த உயர் தர பிரிவில் கற்கும் மாணவன் சவுறுதீன் முகம்மது சியாத் 2 ஆம் இடத்தையும் மற்றும் க.பொ.த சாதாரண தரத்தில் கற்கும் எம்.ரீ.கலீலுள்ளா 1 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

## விடுதி மாணவர் பிரியாவிடை வைபவம்

இவ்வருடம் உயர்தர பரீட்சை எழுதவிருக்கும் விடுதி மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவம் அண்மையில் விடுதி மண்டபத்தில் நடைபெற்றது. விடுதியில் உள்ள ஏனைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் கல்லூரி ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தார்கள், கல்லூரி அதிபர் எஸ்.ஏ.சராப்டீன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இவ்வைபவத்தில் விடுதி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்திருந்தன.

## ஆசிரியர் பயிற்சி நெறி

கடந்த மே 2, 3ம் திகதிகளில் பாடசாலையின் செயற்பாடுகளை கூடிய வினைத்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கோடு ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, மாணவர்கள், பெற்றார்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் முதலியவர்களோடு தொடர்பாக பாடசாலையின் அபிவிருத்திக்கு தடையாகக் காணப்பட்ட விடயங்கள் இனங்காணப்பட்டு அவற்றை நிவர்த்திக்கும் வழிமுறைகள் ஆராயப்பட்டன. களப்பயணமாக இடம் பெற்ற இப்பயிற்சி வகுப்பு மிகப் பயனுடையதாக அமைந்திருந்தது.

## நவீனமயப்படுத்தப்படும் Multimedia Room

நவீன வசதிகளுடன் கூடிய Multimedia Room ஒன்று கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது. பெரிய நகரப்புற பாடசாலைகளில் மாத்திரம் காணப்படும் இவ்வசதியை எமது கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்தும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. இதற்கான உதவியை நோர்வே நாட்டில் வசிக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவரான முகம்மது அலி முபாரக் அலி அவர்கள் தனது முயற்சியின் மூலம் பெற்றுத் தந்துள்ளார். விரைவில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படவிருக்கும் இவ்வறையை உரிய முறையில் ஆசிரியர்களும், மாணவர்களும், சமுகமும் பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென அசைவு விரும்புகிறது.

இவ்வசதி ஏற்படுத்தக் காரணமாகவிருந்த ஜனாப் முபாரக் அலி அவர்களுக்கு அசைவினூடாக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## சுற்றாடல் அதிகார சபையினால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான சுவரொட்டிப் போட்டிகளில் கிண்ணியா மத்திய கல்லூரி மாணவர்களுக்கு அதிக வெற்றிகள் கிடைத்தன.

**தேசிய மட்டம்**

| | | |
|---|---|---|
| காதர் முகம்மது சபீர் | 2ம் இடம் | 7000/= |
| சின்ன வாப்பு முகம்மது இர்ஷாத் | 3ம் இடம் | 6500/= |

**மாகாண மட்டம்**

முகம்மது அகம்மது சப்ரான் 3000/=

இவர்களுக்கான பரிசில்கள் B.M.I.C.H இல் வைத்து அதிகார சபையின் தலைவரினால் வழங்கப்பட்டன.

## நவீனமயப்படுத்தப்படும் கணனி அறை

கல்லூரியின் CLC இற்கு அண்மையில் SEMP திட்டத்தின் மூலம் பல வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 24 மணி நேர இன்டர்நெட் வசதி வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் நீண்ட காலத் தேவை இதன் மூலம் நிவர்த்திக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளுக்கு இதனைப் பயன்படுத்தக்கூடியதாகவுள்ளது.

கடந்த வருடம் GTZ மூலம் கல்லூரியின் கணனி அறைக்கு பல வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட போதும் தொடர்ந்தும் கணனிகள் பற்றாக்குறையாகவே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## புதிய வலயக் கல்வி பணிப்பாளருக்கு பாராட்டு

கிண்ணியா கல்வி கோட்டம் 56 பாடசாலைகளுடன் கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் தனி வலயமாக செயற்பட்டு வருகிறது. வலயக் கல்விப் பணிப்பாளராக ஜனாப்.ஏ.எல்.எம்.ஸகரிய்யா கடமையேற்றுள்ளார். ஜனாப்.ஏ.எல்.எம்.ஸக்கரிய்யா அவர்கள் நிறைந்த அனுபவசாலியாவார். புதிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அசைவு தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

## GCE (A/L) Best Results -2008

| Stream | Name of students | Grades | Dist.rank | Selected Fields |
|---|---|---|---|---|
| Maths | MUM.Nasmy | ABB | 4 | Engineering |
| | AW.Ihshan Khan | ABB | 6 | Engineering |
| | MCM.Rijan | BCC | 14 | Engineering |
| | MJM.Sanoos | CSS | 39 | Phy.Science |
| Bio Science | MLAMRoshankhan | ABB | 10 | Medicine |
| | MA.Shity Sakeena | BCC | 44 | Bioscience |
| | MRA.Razmy | CCS | 91 | Bioscience |
| | M.Sifa | CCS | 100 | Bioscience |
| Commerce | MLM.Safeer | BBC | 90 | Commerce |
| | AK.Feroowkhan | BBC | 99 | Commerce |
| Arts | MAM.Razmy | AAA | 32 | Arts |
| | RM.Nabras | AAB | 45 | Arts |
| | AM.Rafi | ABB | 78 | Arts |
| | N.Fajas | BCC | 100 | Arts |

## க.பொ.த(சா/த) பரீட்சையின் சிறந்த பெறுபேறுகள் -2008

| மாணவர் பெயர் | A | B | C | S |
|---|---|---|---|---|
| எம்.எப்.வசீம் பெரோஸ் | 9 | | | |
| எம்.எச்.எம்.இன்சமம் | 8 | 1 | | |
| எம்.எச்.எம்.ஹுஸ்னி சுகைல் | 8 | | | |
| எம்.என்.எம்.நஸ்மி | 7 | 1 | 1 | 1 |
| எம்.ஏ.எம்.இஸாம்7 | 7 | 1 | 1 | 1 |
| எம்.என்.நுபைல் | 6 | 3 | | |
| எம்.என்.எம்.ஹஸ்ஸன் | 6 | 3 | | |
| எம்.எம்.திஸாம் | 5 | 3 | 1 | |
| எஸ்.எஸ்.சுசைல் | 5 | 3 | 1 | |
| ஜே.எம்.பரீஹீன் | 5 | 2 | 2 | |
| எம்.ரீ.எம்.அஜ்மல் | 5 | | 1 | 1 |
| ரீ.எம்.சிரான் | 4 | 4 | 1 | |
| எம்.எஸ்.எம்.இம்தாத் | 4 | 4 | | |

## G.C.E.(O/L) Results Analysis - 2008

| SUBJECT | TOTAL SAT | TOTAL PASS | 2008 % | Grade Obtained A | B | C | S | W | 2007 % | 2006 % | 2005 % | 2004 % | 2003 % | 2002 % | 2001 % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Islam | 167 | 164 | 98 | 49 | 44 | 44 | 27 | 3 | 98 | 95 | 99 | 88 | 93 | 94 | 68 |
| Tamil | 167 | 136 | 81 | 12 | 16 | 63 | 45 | 31 | 86 | 81 | 95 | 79 | 88 | 70 | 76 |
| English | 167 | 45 | 27 | 2 | 7 | 8 | 28 | 122 | 47 | 36 | 30 | 46 | 30 | 12 | 22 |
| Science | 166 | 116 | 70 | 6 | 11 | 37 | 65 | 47 | 70 | 72 | 67 | 87 | 80 | 67 | 59 |
| Maths | 167 | 112 | 67 | 15 | 9 | 23 | 65 | 55 | 68 | 53 | 54 | 56 | 49 | 54 | 38 |
| History | 166 | 141 | 85 | 9 | 21 | 44 | 67 | 25 | 86 | 82 | 95 | 85 | 91 | 80 | 90 |
| T.Lit | 143 | 106 | 74 | 26 | 13 | 29 | 38 | 37 | 74 | 78 | 84 | 77 | 64 | 46 | 77 |
| Geography | 166 | 137 | 83 | 3 | 15 | 48 | 71 | 29 | 73 | 74 | 87 | 56 | 64 | 41 | 60 |
| Agriculture | 59 | 53 | 90 | 2 | 5 | 30 | 16 | 6 | 97 | 98 | 98 | 96 | 96 | 88 | 89 |
| Health | 52 | 52 | 100 | 32 | 13 | 2 | 5 | 0 | 93 | 100 | 99 | 98 | 99 | 92 | 86 |
| IT | 25 | 22 | 88 | 2 | 3 | 7 | 12 | 1 | 95 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| DT | 32 | 32 | 100 | 0 | 2 | 6 | 24 | 0 | 86 | 59 | 77 | 94 | 90 | 74 | 0 |

| Year | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| No.of Sat | 122 | 107 | 133 | 116 | 97 | 93 | 112 | 138 | 167 |
| No.of Qualified for A/L | 68 | 45 | 66 | 72 | 64 | 70 | 72 | 100 | 118 |
| Percentage | 56 | 42 | 50 | 62 | 66 | 75 | 64 | 72 | 71 |

## உயர்தர மாணவர் கழகங்கள் - 2009

இவ்வருடத்திற்கான உயர்தர வகுப்பு மாணவர் சங்கங்கள் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன. 2009 கழக உறுப்பினர்கள் விபரம் வருமாறு.

**உயர்தர விஞ்ஞானக் கழக அங்கத்தவர்கள்.**

தலைவர் :A.V.M.தில்சாத்
உபதலைவர் :M.H.M. இன்சமாம்
செயலாளர் :A.V.M.நிஹ்ஹால் அகமட்
உப செயலாளர் :Z.சாகிர் குசைன்
பொருளாளர் :A.K.கர்ணி

**உயர்தர வணிகக் கழக அங்கத்தவர்கள்.**

தலைவர் :A.S. சியாஸ்
உபதலைவர் :N. அஸ்லம்
செயலாளர் :M. றினோஸ்
உப செயலாளர்கள்:R.M.மனாஸ்
A.R.M.முனீர்
பொருளாளர் :N.M.பஸ்லான்

**உயர்தர கலைக் கழக அங்கத்தவர்கள்.**

தலைவர் :A.R.M. ஹாலித்
உபதலைவர் :
செயலாளர் :M.M. மபாஸ்
உப செயலாளர் :A.H.இஜாஸ்
பொருளாளர் :M.B.M.இப்காம்

# கல்லூரியின் இல்ல விளையாட்டு நிகழ்வுகள்






(வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இல்ல அலங்காரங்கள்)






(வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இல்ல அலங்காரங்கள்)





(வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இல்ல அலங்காரங்கள்)



(ஆரம்பப் பிரிவு மாணவர்களின் உடற்பயிற்சி)




(இடைநிலை, உயர்வகுப்பு மாணவர்களது வீதி ஓட்டம்)



(ஆரம்பப் பிரிவு மாணவர்களது விளையாட்டு ஆரம்ப நிகழ்வு)




(விளையாட்டுப் போட்டிகளுக்கான அதிதிகள் வருகை)



(உடற்பயிற்சிக் கண்காட்சி)